# 7 இலட்சத்து 11 ஆயிரத்து 981 பேர் ஓய்வூதியம் பெறுகிறார்கள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை .. 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

உருவாக்கி இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**எதிர்க்கட்சி கொறடா கூறிய தேர்தலுக்கான கூட்டணி!**

நான் மானியக் கோரிக்கையிலே, குறிப்பாக இரண்டு துறைகள் குறித்து சுருக்கமாக என்னுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறேன். நேற்றைக்கு இங்கே ஒரு விவாதம் நடக்கிற போது பொதுத் துறை பங்குகளை நாம் விற்ப் கைக்குறித்த ஒரு விவாதம் வருகிற போது, எதிர்க்கட்சித் கொறடா அவர்கள் பேசுகிறபோது, ஒன்றை குறிப்பிட்டார்கள். அவர்கள் சொல்கிறபோது ஒரு விஷயத்தை சட்டமன்றப் பேரவையிலே மிகத் தெளிவாகச் சொன்னார். "கூட்டணி என்பது தேர்தலுக்குத்தான். தேர்தலில்தான் கூட்டணி. தேர்தலுக்குத்தான் கூட்டணி" என்று அவர் நேற்று இங்கு சட்டமன்றத்திலே தெரிவித்தார்கள். அவர்கள் எதை மனதிலே வைத்து அல்லது யாரை மனதிலே வைத்து இதை சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை நேற்றும் இன்றைக்கும் இந்த அவையிலே அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கு தெரியுமோ அல்லது தெரியாதோ, அதுவும் எனக்குத் தெரியாது. ஒருவேளை இன்றைக்கு வந்து உட்கார்ந்திருக்கக்கூடிய நயினார் நாகேந்திரன் அவர்களுக்கும் அவர் எதை வைத்துக்கொண்டு அப்படி சொன்னார் என்பது அவருக்கு தெரியுமா என்றும் எனக்குத் தெரியாது. எது எப்படியிருந்தாலும் எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சொன்னதை நீங்கள் இருவரும் நன்றாக மனதிலே குறித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் உங்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவுரையாக, கடந்த முறை நிதிநிலை அறிக்கைக்கான என்னுடைய பதிலுரையை நான் சொல்கிறபோது, வடக்கிலிருந்து யாரும் வந்து தமிழ்நாட்டை வெற்றிகொண்டு ஆள முடியவில்லை என்பதை நான் தெரிவித்திருந்தேன். மாறாக, தெற்கிலிருந்து பத்தாம் நூற்றாண்டிலே ஒரு மாவீரன் இங்கேயிருந்து கங்கை வரை படையெடுத்துச் சென்று, மாபெரும் வெற்றியைப் பெற்று வந்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**"திருமன்னி வளர இருநில மடந்தையும் போர்ச்செயப் பாவையும் சீர்தனிச் செல்வியும் தன்பெருந் தேவியர் ஆகி"**

என்று தொடங்கக்கூடிய புகழ்பெற்ற மெய்கீர்த்திக்குச் சொந்தக்காரன் அவன்.

**"நித்தில நெடுங்கடல் உத்தரலாடமும் வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கையும்"**

என அலைகடல் நடுவில் கலம் பலச் செலுத்தி, கங்கையும் கடாரமும் கொண்ட இராஜேந்திர சோழன்தான் அந்த மாவீரன். அந்த இராஜேந்திர சோழனுக்கு ஒப்பான மகத்தான தலைவனாக தெற்கிலிருந்து ஒரு சூரியனாக இங்கே வந்து வீற்றிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் காண்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் கலைஞர் எனினும், தான் தலைமையேற்று இந்த கழகத்தை நடத்தக்கூடிய ஒவ்வொரு தேர்தலிலும், கழகத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற மகத்தான ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றிகளைத் தேடித் தந்த தலைவர்.

"தனக்குவமை இல்லாதான் தாள் வாழ்க"

என்று சொன்னார்களே, அப்படி தனக்கு உவமை இல்லாத தலைவனாக விளங்கக் கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் மீண்டும் ஒருமுறை இங்கே நன்றியோடு வணங்க விரும்புகிறேன்.

மாணிக்கவாசகர் என்று அழைக்கக் கூடிய மணிவாசகப் பெருமான், ஆவுடையார் கோயில் என்கின்ற திருப்பெருந்துறையில் இருக்கின்ற இறைவனைப் பாடுகிறபோது, திருவாசகத்தில் ஒன்றைப் பாடினார்.

**"கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின இயம்பின சங்கம் ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத் தேவ நற்செறி கழல் தாளிணை காட்டாய் யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே"**

என்று அந்த இறைவனை அவர் துயில் எழுப்பினார். "யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்" என்று சொன்னார். முனிவர்களாலும், முப்பத்து முக்கோடி தேவர்களாலும் அறியப்படாத முழு முதற்கடவுளாக இருக்கக்கூடிய இறைவனே யாவர்க்கும் நீ அறிவரியாய் இருந்தாய்! ஆனால், எமக்கெளியாய் இருந்தாய்! இதோ உட்கார்ந்திருக்கிறாரே! நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் எத்தனை பெருமைகளைப் பெற்றவராக இருக்கிறார்!

**தமிழ்நாட்டின் தன்னிகரற்ற முதலமைச்சர்!**

இப்பூவுலகத்தில் இருக்கக்கூடிய ஒப்பற்ற தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தத் தமிழ்களாய் திகழ்கிறார். தமிழ்நாட்டின் தன்னிகரற்ற தனிப்பெரும் முதல்வராகத் திகழ்கிறார். குறிப்பெடுத்து சொல்லச் செப்பிய எத்தனையோ வெற்றிகளுக்கு அவரே காரணகர்த்தாவாக இருக்கிறார். ஆனால், இவ்வளவு வெற்றிகளையும் தன்னிடத்திலே கொண்டிருப்பதைப்போல.

இராமாயணத்தில் ஓரிடத்தில் வால்மீகி சொல்வார், இராமனுடைய கல்யாண திருக்குணங்களையெல்லாம் சொல்கிற போது, இராமன் எப்படிப்பட்டவனாக இருக்கிறான் என்று ஓரிடத்தில் சொல்கிறார். இராமன் சக்கரவர்த்தியின் திருமகன்; அதனால் இராமன் சௌலப்யமாக இருந்தான் என்று சொன்னார். சௌலப்யம் என்கிற வடமொழிச் சொல்லுக்கு எளிவந்த தன்மை என்பதே தமிழில் சரியான பொருளாக இருக்கிறது. அவன் சக்கரவர்த்தித் திருமகனாக இருந்தான்; மாபெரும் அயோத்தியின் அரசனாக இருந்தான். ஆனால், சாதாரண குடிமக்களும் தன்னை வந்துப் பார்க்கக்கூடிய அளவிற்கு எளிமையான ஒருவனாக இருந்தான் என்று வால்மீகி சொன்னார். அதைத்தான், யாவர்க்கும் அறிவரியாய் ஆக இருந்தாலும், எமக்கெளியாய் என்று மணிவாசகப் பெருமான் தெள்ளுதமிழினத் தமிழில் மிக அருமையாக அந்தப் பாடலில் குறிப்பிட்டார். அதுபோல், இன்றைக்கு அவர் முதலமைச்சராக இருந்தாலும், தமிழ்நாட்டின் கடைக்கோடியில் இருக்கக்கூடிய தமிழ் மகனும் அவரை வந்துப் பார்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய குறையைச் சொல்லக் கூடிய அளவிற்கு, சாதாரண ஏழை, எளிய மக்களுக்கும் எளியவனாக இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களின் இந்த எளிவந்த தன்மைதான் நீங்கள் பெற்றிருக்கக்கூடிய சிறப்புகளிலெல்லாம் பெருஞ் சிறப்பாக நாங்கள் கருதுவோம் என்பதைச் சொல்லி, 2026 ஆம் ஆண்டில் நீங்கள் தேர்தலில் யாரை வேண்டுமானாலும் கூட்டணியில் சேர்த்துக்கொண்டு, எந்த விதமான permutations and combinations-ஐ வேண்டுமானாலும் போட்டுக்கொண்டு, யாருடன் தேர்தல் களத்திற்கு வந்தாலும்,

எப்படி தலையாலங்கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங்கானத்தில் அவரை எதிர்த்து வந்திருக்கக்கூடிய அவனையும், அவனோடு கூட்டணியில் வந்திருக்கக்கூடிய வேளிரையும் எப்படி அவன் வெற்றிகொண்டு இன்றைக்கும் சரித்திரத்தில் நிலைத்திருக்கிறானோ, வெண்ணிப்பறந்தலையில் வெற்றிகொண்டு, தன்னை எதிர்த்து நிற்கக்கூடிய மன்னர்களையெல்லாம் தோற்கடித்து, அந்தக் கூட்டணிகளையை எப்படியெல்லாம் வெற்றிகண்டு இன்றைக்கும் கரிகால் பெருவளத்தான் புறநானூற்றிலும், தமிழ் இலக்கியங்களிலும் 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!' என்று அவனை இன்றைக்கும் புறநானூறு பாடுகிறது.

அப்படிப்பட்ட கரிகால் பெருவளத்தான் அவன் பெற்றிருக்கக்கூடிய வெண்ணிப்பறந்தலை வெற்றிகளைப் பெற்றிருக்கக் கூடிய கரிகால் பெருவளத்தானைப்போல, இனி எந்தத் தேர்தல் வந்தாலும், அந்தத் தேர்தல்களில் எல்லாம் வெற்றிபெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் தமிழ் நாட்டில் மிகப் பெரிய வரலாற்றைப் படைக்கக்கூடியவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருப்பார்கள் என்று சொல்லி, அவர் வாழ்க, புறநானூற்று வரிகளில், 'நல் நீர் பஃறுளி மணலிலும் பலவே' என்று வாழ்த்தியதைப்போல, அவர் கடற்கரையில் வீற்றிருக்கக்கூடிய அந்த மணற்துளிகளிலும், கடல் உள்ளவரையிலும், கார் உள்ளவரையிலும், இந்த பார் உள்ளவரையிலும் உங்கள் புகழ் ஓங்குக! ஓங்குக! என்று சொல்லி, என் உரையை நான் நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த உரையை நிறைவு செய்வதோடு, இந்தத் துறைகளுக்கு தொடர்ந்து எங்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கக்கூடிய அரசு தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், முதலமைச்சரின் செயலாளர்கள், நிதித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், அவர்கள் தலைமையில் இயங்கக்கூடிய துறை யினுடைய தலைவர்கள், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, தலைமையிலான துறையினுடைய தலைவர்கள், அத்துறைகளில் பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டு துறைகளில், நிதித் துறை தொடர்பாக 64 வெட்டுத் தீர்மானங்களும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக 46 வெட்டுத் தீர்மானங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் நான் படித்திருக்கிறேன். அவற்றிற்கெல்லாம் உரிய விளக்கங்களை நான் தந்திருக்கிறேன். எனவே, அவற்றை ஏற்றுக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரையாற்றினார்.

## சுற்றுச்சூழலில் ஏற்படுகின்ற மாசுவைத் தடுக்க 10.86 கோடி மரக்கன்றுகள் - மீண்டும் மஞ்சள் பை!

---

### தமிழ்நாடு அரசின் திட்டங்களை சமூக வலைதளங்களில் பரப்பி, வரும் சட்டமன்றத் தேர்தலில்

# தகவல் தொழில் நுட்ப அணி மிகச் சிறந்த முறையில் செயல்பட வேண்டும்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பேச்சு! நன்னியூர் ராஜேந்திரன் -- ரேகா பிரியதர்ஷினி பங்கேற்பு!

*நாமக்கல், ஏப். 30 -*

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டம் திமுக அலுவலகம் கலைஞர் இல்லம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். தொகுதிப் பொறுப்பாளர்கள் நன்னியூர் ராஜேந்திரன், ரேகா பிரியதர்ஷினி சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன்.சித்தார்த் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் சர்தார்ஜான், சுதா ஜெயக்குமார், பூபதி, நாமக்கல் கிழக்கு நகரச் செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான செ.பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட நன்னியூர் ராஜேந்திரன் பேசும் போது,

தி.மு.க. அரசு ஆட்சி அமைத்ததற்கு பிறகு செயல்படுத்திய சாதனைகள் மற்றும் திட்டங்களை ஒன்றிய, நகர, பேரூர் பகுதி கிராமங்களில் உள்ள மக்களிடம் எடுத்துரைத்து அரசின்



திட்டங்களில் பயன் பெற்றவர்களை படம் மற்றும் பேட்டி வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பகிர வேண்டும் என்றார்.

ரேகா பிரியதர்ஷினி பேசுகையில்,

தி.மு.க. ஆட்சி அமைப்பதில் ஐ.டி விங் தான் பெரும் பங்கு ஆற்றியது என்று கழகத் தலைவரான முதல்வரே பாராட்டும் வகையில் நமது பணிகள் அமைய வேண்டும். அத்தகைய சிறப்பான பணியை செய்வதில் நாமக்கல் மாவட்ட ஐடி விங் தமிழ்நாட்டிலேயே முதல் இடம் பெற வேண்டும் என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய ராஜேஸ்குமார், தமிழ்நாட்டில் திமுகவுக்கு தான் முதலாவதாக அதிக அளவில் பூத் கமிட்டி அமைந்துள்ளது. இந்திய அளவில் உயர்கல்வி, தொழில் வளம் ஆகியவற்றில் தமிழ்நாடு தான் முன்னணியில் உள்ளது. 1989 ஆம் ஆண்டு பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திமுக அரசு. 1996 ஆம் ஆண்டில் 30%. பெண்களுக்கு உள்ளாட்சியில் இருக்கும். தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு உள்ளாட்சியில் 50 % ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதிகளவில் பல்கலைக்கழகங்கள் துவக்கி செயல்படுத்தியது கலைஞர் ஆட்சியில் தான். அறிவு சார்ந்து செயல்படுத்துவது தமிழர்கள் தான். இன்று பெண்கள் ஓட்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தான். மகளிர் இலவச பஸ் பயணம், நகை கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவி குழு கடன் மற்றும் தள்ளுபடி என கலைஞர் காட்டிய வழியில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் 1989 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில்தான்துவங்கப்பட்டது. இன்றைக்கு அவருடைய வழியில் ஆட்சி செய்யும் முதல்வர் மு.க . ஸ்டாலின் பெண்களுக்காக புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் இன்று அரசு பள்ளிகளிலும், அரசு கல்லூரிகளிலும் அதிக அளவில் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. அரசு பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்களை அப்படியே காப்பி அடித்து வட மாநிலங்களில் உள்ள மாநிலங்களோடு, பாஜக ஆளும் மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படுத்தி வரும் காலை உணவுத் திட்டத்தை கனடா நாட்டில் செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் 40 தொகுதிகளையும் வென்றதற்கு முக்கியமான காரணமாக தகவல் தொழில்நுட்ப அணி தான் விளங்கியது என்பது பெருமைக்குரிய விஷயம்.

நாமக்கல் மாவட்டத்தில் புறவழிச்சாலை திட்டம், புதிய பேருந்து நிலையம், 100 கோடி மதிப்பில் ஆவின் பால் பண்ணை, ராசிபுரம் தொகுதியில் ரூ.840 கோடி தங்கு தடை இன்றி குடிநீர் வழங்கும் திட்டம், மோகனூரில் ரூ. 25 கோடியில் வீட்டுக்கு வீடு குடிநீர் திட்டம், நாமக்கல் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தியது, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கொல்லிமலையில் தனி ரத்த வங்கி, தகவல் தொழில்நுட்ப டவர், வீடு கட்டும் திட்டத்திற்கு 3 1/2 லட்சம், சாலை வசதிகள் என பல்வேறு சாதனைகளை செயல்படுத்தி உள்ளோம். ரூ. 140 கோடியில் போதமலைக்கு சாலை வசதி, சிப்காட் தொழிற்பேட்டை, நைனாமலைக்கு சாலை வசதி, மாவட்ட தலைமை மருத்துவமனை உயர்த்தியது என பல்வேறு திட்டங்கள், கடந்த 30 ஆண்டுகளில் இதுவரை எந்த அரசும் செய்யாத திட்டங்களை தற்போது செய்துள்ளோம். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தகவல் தொழில் நுட்ப அணி மிகச் சிறந்த முறையில் செயல்பட வேண்டும். இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் நலங்கிள்ளி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பா.கிருபாகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்பரர் வ.இளம்பரிதி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட தொ.மு.ச சார்பில் ஓசூரில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா நடைபெற்றது. தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தொ.மு.ச. பேரவை துணைத்தலைவர் கிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ், தொ.மு.ச. பேரவை தலைவர் நடராஜன், மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், ஓசூர் மாநகர மேயர் சத்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

### சேலம் மத்திய மாவட்டம் - 39 வது வட்டத்தில்

# கழக வாக்குச் சாவடி முகவர்களை அவர்களது இல்லத்தில் சந்தித்து பொன்னாடை அணிவிப்பு!

### அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் – தீவிர தேர்தல் பணியாற்றிட வலியுறுத்தல்!

சேலம், ஏப். 30 -

சேலத்தில் தி.மு.க. சார்பில் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அமைச்சர் ஆர். ராஜேந்திரன் சந்தித்து வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தி. மு.க. வெற்றிக்காக தற்போது முதலே தீவிரமாக பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு தொகுதிகளிலும் வாக்குச்சாவடி வாரியாக தி.மு.க. சார்பில் நியமிக்கப்பட்ட வாக்குச் சாவடி முகவர்களை மாவட்டச் செயலாளர்கள் தொகுதி பார்வையாளர்கள் மற்றும் நேரில் சந்தித்து வருகின்ற சட்டமன்ற தேர்தலில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்ற ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

அதன்படி சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தெற்கு தொகுதியில் 39 வது வட்டத்திற்குட்பட்ட மாருதி நகர் பகுதியில் தி.மு.க. சார்பில் நியமிக்க ப்பட்டுள்ள வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களை அவர்களது இல்லத்திற்கே நேரில் சென்று சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் சுற்றுலாத் துறை அமைச்சருமான ஆர்.ராஜேந்திரன், சந்தித்து அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

மேலும் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றிக்காக தீவிரமாக பணியாற்றிட வேண்டும் என்றும் அரசின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துச் செல்லும் பணியை தற்போது முதலே துவங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அமைச்சருடன் சேலம் தெற்கு தொகுதி பார்வையாளர் பார் இளங்கோவன், மாநகர துணை செயலாளர் கணேசன் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஜெகன் மற்றும் அசோகன் ஆகியோர் உடன் சென்றனர்.

# வேப்பூர் தெற்கு சி.ராஜேந்திரன் தாயார் மறைவு!

### வீ.ஜெகதீசன் – முன்னணியினர் அஞ்சலி!

*பெரம்பலூர், ஏப். 30 -*

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சி.ராஜேந்திரன் தாயார் சி.அஞ்சலை (70) என்பவர் 28.02.2025, திங்கட்கிழமை அன்று அதிகாலையில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார். அவரது சொந்த ஊரான வேப்பூர் தெற்கு ஒன்றியம், மருவத்தூர் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த உடலுக்கு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையில் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

இதில் குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ் குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை சி. பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி. மாரிக்கண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ர மணியன், ஆர். அருண், மா.பிரபாகரன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் பாரி(எ)அப்துல்பாரூக், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், துணை அமைப்பாளர் கோவிந்தராஜன், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஆர்.சுந்தர்ராஜ், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் க.ராமலிங்கம்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், லெப்பைக்குடிக்காடு பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர்உசேன்,

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், பி.அறிவுச்செல்வன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. பொன்னுரங்கம்

ஏப்ரல் 30 (2021)



கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**